நாள் 10.05.2024

CC 97/2018

அசா 2

பெயர் : பழனிச்சாமி

த/பெ.ராமன்

(Accused absent. Petition u/s.317 Crpc filed and allowed)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. என் வீட்டில் 2016ம் வருடம் கண் தெரியாத என் அம்மா வசித்து வந்தார் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் ஒரு சமையலறையும் மேலும் ஒரு சிறு அறையும் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். கண் தெரியாத என் அம்மா என் வீட்டில் உள்ள நபர்கள் வீட்டிற்குள் வரும்போது உணர்ந்துகொள்வார் என்றால் சரிதான். வேறு நபர்கள் வீட்டிற்குள் வந்தாலும் என் அம்மா அதை உணர்ந்து அவர்கள் யார் என்று கேட்பார் என்றால் சரிதான்.

2. என் வீட்டில் என் அம்மா இருந்த கால கட்டத்தில் வெளிநபர்கள் யாரும் வந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். என் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் என் மகள் அசா 1 கூறித்தான் தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு நான் கேள்விப்பட்ட சங்கதிகளைதான் நீதிமன்றத்திலும் போலீசாரிடமும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி கொலை மிரட்டல் விடுத்தால் என் மகள் பயந்து மேற்படி சங்கதிகளை என்னிடம் கூறினார்.

3. அவ்வாறு எதிரி கொலை மிரட்டல் விடுத்தது பற்றி என் மகள் கூறிதான் எனக்கு தெரியும். அதன்பிறகு நான் எதிரியிடம் கேட்டபோது எதிரி என்னையும் கொலை மிரட்டல் விடுத்தார். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரி மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.